தலைப்பு 189 – பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 189 – பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 யூன் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்டம்பர் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	மீளாய்வாண்டின் போது நிதியல்லாச் சொத்துக்கள் கைப்பற்றுவதற்காக ரூபா 226,373,135 செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் (SA – 82) அப்பெறுமதி ரூபா 173,856,707 ஆக ரூபா 52,516,428 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	(i), (ii) மற்றும் (iii) முன்னைய ஆண்டின் இறுதி நிதியல்லாச் சொத்துக்கள் மீதி கணக்காய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் இணக்கம் செய்த போது மீதிக்கு சமமாக இல்லாது இருந்த பிரச்சனைகள் அமைச்சின் கணக்கீட்டு வழு அல்லாது இருந்ததுடன் அது CIGAS கணக்கீட்டு முறைமையில் காணப்படுகின்ற தொழில் நுட்பப் பிரச்சனையின் காரணமாக ஏற்பட்டு இருந்தது. இது தொடர்பாக தொடர்ச்சியாக திறைசேரியின் தேசிய கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி சரி செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டதுடன் மீண்டும் மீண்டும் அந்த வழு ஏற்பட்டிருந்தது. இது	ஆரம்ப மீதிகளின் வேறுபாடுகள் தொழில் நுட்ப பிரச்சனைகளை சரி செய்து கணக்கு மீதிகள் சரியாக தயாரித்து சமர்ப்பிப்படல் வேண்டும்.
(ii)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள், நடைமுறை வேலைகளின் மீதி ரூபா 732,237,046 ஆக இருந்த போதிலும் 2024 சனவரி 01 இல் உள்ளவாறு அது ரூபா 762,739,186 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக SA-82 இன் ஆரம்ப மீதி ரூபா 30,502,140 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		

(iii)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து உபகரணங்கள் ரூபா 852,430,841 ஆக உம் 2024 சனவரி 01 இல் உள்ளவாறு அது ரூபா 715,330,840 ஆகவும் காண்பிக்கப்பட்டதன் காரணமாக SA-82 இன் ஆரம்ப மீதி ரூபா 137,100,001 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	தொடர்பாக இலக்கம் PS/03/FIN/02/84/2025 மற்றும் 2025.03.24 அந் திகதிய பணிப்பாளர் நாயகம், தேசிய கணக்குகள் திணைக்களத்திற்கு எழுத்து அறிவிக்கப்பட்டள்ளதுடன் வாய் மூலம் அறிவித்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும் ஆகஸ்ட் மாதம் திறைசேரி அச்சிடல் பிரதியின் மூலமும் உறுதிப்படுத்தப் படவில்லை. சரி செய்தல் திறைசேரி அச்சிடல் பிரதியின் மூலம் வெளிப்படுத்தப்படாது இருந்தமையும் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	
(iv)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 2,888,360,739 ஆக இருந்த போதிலும் 2024 சனவரி 01 இல் உள்ளவாறு அது ரூபா 2,802,095,873 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக SA-82 இன் ஆரம்ப மீதி ரூபா 86,264,866 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றின் அச்சிடல் வழுக்களை சரி செய்து சரியான நிதி அல்லாச் சொத்துக்கள் மீதி 2024 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது.	அச்சிடல் வழுக்கள் ஏற்படாத வகையில் மீதிகள் குறிப்பிடப்படல் வேண்டும்.
(v)	மீளாய்வாண்டின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு உரிய 09 வாகனங்கள் விபத்துக்கு உட்பட்டு இருந்ததுடன் அது தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு i மற்றும் ii இல் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2024 ஆம் ஆண்டில் நட்ட இழப்பு பதிவேடு நாளது வரையாக்கல் கைவிடப்பட்டிருந்ததுடன் தற்போது அந்த தகவல்கள் உள்ளடக்கி நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது.	விபத்து தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் பதிவேடுகள் முறையாகவும் மற்றும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i) நட்டங்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புத் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.	நிதிப்பிரமாணம் 110(1) இன் பிரகாரம் முற்பணக் கணக்குகளின் இழப்புக்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் இருந்து ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்பான அறிக்கை இடுவதற்காக தனித்தனியாக பதிவேடுகள் பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் முற்பண கணக்குகளில் இது வரையில் இழப்பு ஒன்று அறிக்கையிடப்படாது இருந்தமையால் அதற்காக பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட வில்லை. எனினும் எதிர்வரும் ஆண்டிற்காக பதிவேடு ஒன்றை ஆரம்பித்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற படிவத்தின் படி இழப்பு தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ii) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை ஒன்று CIGAS கணனி முறைமையின் மூலம் வழங்கப்படுகின்றமையினால் பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படவில்லை. எனினும் கணக்காய்வு ஐய வினாவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் பொறுப்புக்கள் பதிவேடை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் நாள்தோறும் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்பு பதிவேடில் அந்த பொறுப்புக்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு
(i)	1.6.1	அமைச்சுக்கு உரிய 4 வாகனங்கள் ஐந்து சந்தர்ப்பங்களின் போது விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	1.6.1(அ) (v)
(ii)	1.6.2 (அ) (i)	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் நடைமுறை வேலை முன்னைய ஆண்டின் இறுதி மீதி அடுத்து வரும் ஆண்டின் சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப மீதியாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	1.6.2(அ)(ii)
(iii)	1.6.2 (அ) (ii)	ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முன்னைய ஆண்டின் இறுதி மீதி அடுத்து வரும் ஆண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதியாகக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல்.	1.6.1(அ)(iv)
(iv)	1.6.2 (அ) (iv)	செலவினப் பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் கைப்பற்றுவதற்காக ரூபா 237,371,259 செலவிடப்பட்டிருந்த போதும் நிதிச் சொத்துக்கள் கூற்றில் (ACA – 6) கொள்வனவாக ரூபா 77,732,482 காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் போதான கொள்வனவுகள் ரூபா 59,639,777 நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	1.6.1(அ) (i)

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	கருத்துரைகள்
(அ)	இலக்கம் 189-1-01-1202-009 (எரிபொருள் ஏனையவை) மற்றும் 189-1-01-1203-002 (சீருடைகள்) என்ற செலவின விடயங்களுக்காக ரூபா 100,000 வீதம் ஒதுக்கப்பட்ட ரூபா 200,000 மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப் பட்டிருந்ததுடன் அதற்குக்	அமைச்சரின் பதவியணியினருக்காக இந்த செலவின விடயங்கள் ஒதுக்கப்பட்டதுடன் அத்தியாவசிய அவசர செலவின எதிர்பார்ப்பு இந்த செலவின விடயங்களுக்கு மதிப்பீடு மிகவும் குறைந்த	தேவையினை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

	காரணமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய, ஏனைய தேவைகளுக்காக எரிபொருள் பயன்படுத்துவதற்காக சிட்டைகள் சமர்ப்பிக்காமை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் அமைச்சரவைக்கு நியமிக்காமையின் அடிப்படையில் நிதியேற்பாடுகள் சேமிப்பிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தது.	பெறுமதி ஒன்று உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட போதும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படாமையின் அடிப்படையில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	மதிப்பீடு தயாரித்தலின் நலிவின் காரணமாக 21 செலவின விடயங்களுக்கான ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டுக்கு இடையே தளம்பல்கள் ஆரம்ப மதிப்பீட்டின் வீதமாக 50 சதவீதம் முதல் 2600 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.	அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க சம்பள அதிகரிப்பின் காரணமாக சம்பளம் மற்றும் படி செலவினம் விடயத்திற்காக மேலதிக நிதியேற்பாடு பெறல் மற்றும் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றங்கள் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் ஏனைய செலவின விடயங்களில் அரசாங்கத்தினதும் அமைச்சு மட்டத்திலும் ஆண்டில் இடம்பெற்ற அத்தியாவசிய மாற்றங்களின் போது ஒட்டுமொத்த மதிப்பீட்டிலும் பல்வேறு நிதி ஏற்பாடுகள் மாற்றுவதற்காக ஒதுக்கீட்டு சட்டத்தினால் மற்றும் நிதிப்பிரமானத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மாற்றல்களின் காரணமாக ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீட்டுக்கு இடையே வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது.	தேவைகளை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	செலவின விடயங்கள் 16 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 3,315,898,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 2,160,749,118 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் வீதமாக 36 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	ரூபா 2,160,749,118 ஆன நிதியேற்பாட்டின் சேமிப்பு ரூபா 1,943,373,939 தொகையும் இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டத்திற்கு உரியதாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடாக இருந்ததுடன் இலத்திரனியல் அடையாள அட்டை செயற்திட்டத்திற்கு உரிய சில பெறுகைகள் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாது	தேவைகளை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

		இருந்தமை, அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் ஆட்சேர்க்கப்படாமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பயிற்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு முடியாது இருந்தமை போன்ற காரணங்களினால் இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	
(ஈ)	07 செலவின விடயங்களுக்காக நிதிபிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 125,900,000 நிதியேற்பாட்டில் ரூபா 39,729,790 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் வீதமாக 13 சதவீதம் முதல் 150 சதவீத வீச்சினைக் கொண்டிருந்தது.	போதியளவான நிதியேற்பாடு காணப்படாமையால் பெறுகைகள் ஆரம்பிக்க முடியாது இருந்தமையால் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் நிதியேற்பாடு பெற்று உரிய பெறுகைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் உரிய செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்ததன் அடிப்படையில் நிதியேற்பாடு சேமிப்பு காண்பிக்கப்படுகின்றது.	மதிப்பீடு சரியாக தயாரித்து நிதியேற்பாடு ஒதுக்கப்படல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**கருத்துரைகள்**
(அ)	நிதிப்பிரமாணம் 447(i) இன் பிரகாரம் ஒதுக்கீட்டு செலவின பேரேடு ஒன்று பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் சேமிப்புக்களில் உள்ள சரியான தொகையின் அளவை இனங்காணக் கூடிய வகையில் கணக்கில் செலவிடப்பட்ட தொகையின் அளவு மாத்திரம் அல்லாமல் கடப்பாடுகள் உள்ள பொறுப்புக்களும் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பொது- 138 இன் பிரகாரம் செலவினப் பேரேட்டில் கடப்பாடுகள் ஏற்படுத்தப் பட்டிருந்த சகல பொறுப்புக்களும் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.	தற்போது பொறுப்புப் பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 447(1) இன் பிரகாரம் சேமிக்கப்பட்டுள்ள பணத்தின் அளவை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் செலவினப் பேரேடு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

(ஆ)	2024 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் 3.3 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் 94(3) இன் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டி இருந்த போதிலும் 11 செலவின விடயங்களுக்கு உரிய 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்படுத்தப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 2,827,638 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.	நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் அடுத்து வரும் நிதியாண்டில் பொறுப்புக்களை மேற்கொள்ளும் எதிர்பார்ப்பில் பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டதுடன் நடப்பாண்டின் காணப்படுகின்ற நிதியாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் அளவு போதாமையின் அடிப்படையில் சிகாஸ் உள்ளீட்டில் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட வில்லை.	2024 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் 3.3 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் 94(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	94(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதியேற்பாட்டை விஞ்சி செலவினங்களை மேற்கொள்வதற்கோ அல்லது கடப்பாடுகளோ ஏற்படுத்த முடியாது இருந்த போதிலும் நிதியேற்பாட்டை விஞ்சி மீளாய்வாண்டில் 13 செலவின விடயங்களின் கீழ் ரூபா 2,086,431 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் மீண்டெழும் தன்மையுள்ள செலவினங்களுக்காக காணப்படுகின்ற நிதியாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை காண்பிக்கும் போது மற்றும் அடுத்து வரும் நிதியாண்டின் போது அந்த செலவினங்கள் எதிர்பார்க்கப்படுமாயின் நிதிப்பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாமல் திணைக்களத்திற்கு அடுத்து வரும் நிதியாண்டில் பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட முடியும்.	நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதியேற்பாடை விஞ்சி செலவினங்களை செய்வதற்கோ அல்லது கடப்பாடுகளை ஏற்படுத்தவோ முடியாது இருத்தல் வேண்டும்.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**கருத்துரை**
அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து பேணிச்	அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின்

செல்லப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்குமாயின் அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	ஒன்றைத் தயாரித்து பேணிச் செல்வதற்கும் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வை மேற்கொள்வதற்கும் அதன் பிரகாரம் கட்டுபாட்டு முறைமையின் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ – பீ இன் மூலம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம்.	38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்			பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமை**		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை				
(i)	நிதிப்பிரமாணம் 104 (3), (4)	-	காணாமல் போதல் இழப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 104(4) இன்	நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் எதிர் காலத்தில்	நிதிப்பிரமாணம் 104(3), 104(4) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை, முழுமையான அறிக்கை குறித்துரைத்த

			பிரகாரம் முழுமையான அறிக்கை திறைசேரியின் பிரதி செயலாளருக்கு சமர்ப்பித்து அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கையின் பிரதிகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்க வில்லை.	அந்த அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு குறிப்பிடுகின்றோம்.	பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 156 (ஆ)	-	அரசாங்கத்தால் தமக்கு விநியோகிக்கப் பட்ட அல்லது தமது பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கு வழங்கப்படுகின்ற எந்த ஒரு ஆதனமும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல், உரிய பிரகாரம் பயன்படுத்துதல் தொடர்பாக சகல சந்தர்ப்பங்களிலும் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும். எனினும் இரண்டு வாகன விபத்துக்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் தேவையற்றதாக பொலிசிற்கு சாரதியால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.	இலக்கம் KX-5893 மற்றும் KX-5897 என்ற வாகனம் தொடர்பாக இந்த சாரதி பொலிஸ் இல் முறைப்பாட்டில் அவ்வாறு குறிப்பிட்டு இருந்த போதிலும் அந்த விபத்து தொடர்பான அலுவலக பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப் படுகின்றது.	நிதிப்பிரமாணம் 156(ஆ) இன் பிரகாரம் அரசாங்கத்தால் தமக்கு விநியோகிக்கப் பட்ட அல்லது தமது பொறுப்பில் வைத்துக் கொள்வதற்கு வழங்கப்பட்ட எந்த ஒரு ஆதனத்தையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.
(iii)	நிதிப்பிரமாணம் 1647(ஆ)	-	அமைச்சின் வாகனங்கள் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ள	வாகன உபகரணங்களை மெய்மையாய்வு செய்வதற்காக தொழில் நுட்ப அறிவுடன்	நிதிப்பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாரம் அமைச்சுக்குரிய வாகனம் மற்றும் அவற்றின்

		வேண்டி இருந்ததுடன் ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து மேலும் ஒரு உத்தியோகத்தருக்கு வாகனம் கையளிக்கப்பட்ட அவ்வாறு வாகனத்தின் சாரதி தொடர்பான மாற்றங்களும் உடனடியாக அவ்வாறான மெய்மையாய்வில் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அமைச்சுக்குரிய வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்க வில்லை.	பொருள் மெய்மையாய்வு சபை ஒன்று நியமிக்கப்படாது இருந்தமையால் வாகன உபகரணங்களின் மெய்மையாய்வு மேற்கொள்ள முடியாது இருந்ததுடன் எதிர் வரும் பொருள் மெய்மையாய்வின் போது இது தொடர்பாக கவனம் செய்வதற்கு குறிப்பிடுகின்றோம்.	உபகரணங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப் படல் வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 - ஆம் திகதி இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு	சகல எரிபொருள் பரிசோதனையின் கடந்த 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது கிலோமீற்றர் 25000 தூரம் ஓடியதன் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பான பிரதான பழுது பார்த்தலை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இதில் எந்த விடயங்கள் முதலாவது இடம் பெறுகின்றதோ அந்த சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு அந்த அறிக்கை இயந்திரப் பொறியியலாளரின் அவதானிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட போதும் ஒரே வகையின் வாகனங்களின் எரிபொருள் எரிவு பல்வேறு பெறுமதியைக் காண்பிக்கின்றமையால் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமென இயந்திரப் பொறியியலாளரால் அறிவிக்கப்பட்டமையால் இயந்திரப் பொறியியலாளரின் தலைமை	சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

				குழு ஒன்று நியமித்து மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	
(இ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவை				
(i)	5.4.8 ஆம் பிரிவு	24,800,000	ஒப்பந்தகாரரால் ஒப்பந்த உடன்படிக்கையை மீறுவாராயின் பெறுகைகள் நிறுவனத்தை பாதுகாப்பதற்காக மதிப்பீட்டு ஒப்பந்த தொகையில் 05 சதவீதத்திற்கு குறையாத தொகை ஒன்று செயலாற்றல் காப்புறுதியாக பெற வேண்டியிருந்த போதிலும் ICAO மென்பொருள் சார்ந்த சேவை நாளது வரையாக்குவதற்காக E.W Information System (PVT) Ltd நிறுவனத்திற்கு ரூபா 24,800,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் அதற்குரிய செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை.	வருடாந்தம் பராமரிப்பு சேவை உடன் படிக்கையின் கீழ் பேணிச் செல்லப்படுகின்றமையால் நிர்மாண வேலைகளுக்காக எடுக்க வேண்டிய செயலாற்றல் காப்புறுதி இதன் போது தேவையற்று இருந்தது என கருதுகின்றோம். எனினும் செயலாற்றல் காப்புறுதி ஒன்றை பெறுவதாயின் பொறுகை நிறுவனத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தபடுகின்றது என ஏற்றுக் கொள்வதுடன் இதன் பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்ற சந்தர்ப்பத்தில் செயலாற்றல் காப்புறுதி பெறப்படல் வேண்டும்.
(ii)	8.7.1 ஆம் பிரிவு	-	ஒப்பந்தம் கையளிக்கும் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் உடனடியாக கையளித்தல் கடிதம் விநியோகிகப்பட வேண்டியிருந்த	இது புதிய பெறுகை ஒன்று இல்லாது இருந்தமையால் கையளித்தல் கடிதம் விநியோகிப்பது தேவையற்றது	8.7.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தம் கையளிக்கும் இறுதித் தீர்மானம் எடுத்த உடன்

			போதிலும் ICAO மென்பொருள் சார்ந்த சேவை நாளது வரையாக்குவதற்கான பெறுகையின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	என கருதியமையால் இந்த கடிதம் விநியோகிகக்கப்படாது இருந்ததுடன் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மென்பொருள் சார்ந்த பெறுகைகளின் போது கையளித்தல் கடிதம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கையளித்தல் கடிதம் விநியோகிக்கப்படல் வேண்டும்.
(iii)	8.9.3 ஆம் பிரிவு	-	உரிய பணிகள் வழங்கப்பட்ட ஒப்பந்த காரருடன் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்து இடவேண்டி இருந்த போதிலும் ICAO மென்பொருள் சார்ந்த சேவைகளை நாளது வரையாக்குவதற்கான ஒப்பந்தம் தொடர்பாக ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கினறோம். இது புதிய பெறுகை அல்லாது இருந்தமையால் காணப்படுகின்ற மென்பொருள் முறைமையில் அபிவிருத்தி செய்யப்பட்டு இருந்தமையால் உடன்படிக்கையில் கைச்சாத்திடல் மேற்கொள்ளவில்லை. மேலும் வருடாந்தப் பராமரிப்பு உடன்படிக்கையின் மூலம் ஒட்டு மொத்த மென்கோல் முறைமையும் மேவுகை செய்கின்றமையும் அதற்குக் காரணமாக இருந்தது.	8.9.3 பிரிவின் பிரகாரம் உரிய பணிகள் வழங்கிய ஒப்பந்தகாரருடன் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	கருத்துரை
நிதிப்பிரமாணம் 571 (1) இன் பிரகாரம் ஒவ்வொரு அரை ஆண்டின் இறுதியின் போதும் காலாவதியாகின்ற சகல வைப்புக்கள் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	காலாவதியான வைப்பு பட்டியல் ஒன்று தயாரிக்கப்படாது இருந்ததுடன் எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் 571(1) இன் பிரகாரம் அரை ஆண்டு காலாவதியான அறிக்கை தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணம் 571(1) இன் பிரகாரம் வைப்புத் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	கருத்துரைகள்
